பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை (13-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 17

# புலிகளுக்கு எதிராக அரசு சர்வதேச பிரசார இயக்கம்!

## அமைச்சர் கதிர்காமர் அறிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 13

**சர்வதேச ரீதியில் ஸ்ரீலங்காவின் பெயரைக் காப்பாற்றவும் - விடுதலைப் புலிகளால் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் பிரசார நடவடிக்கைகளை முறியடிக்கவும் - சர்வதேச பிரசார இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.**

**வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இது பற்றிய அறிவிப்பை நேற்று நாடாளுமன்றத்தில் விடுத்தார்.**

வெளிவிவகார அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீட்டுக்கான குழுநிலை விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய போதே இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை, புனர்வாழ்வு— மீளக்குடியமர்வு விவரங்கள் போன்றவை தொடர்பான உண்மைத் தகவல்களை உலக நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வழங்கும் நடவடிக்கையாகவே இந்தப் பிரசார இயக்கம் செயற்படுத்தப்படவிருக்கிறது.

இப்பிரசார இயக்கம் மூலம் சர்வதேச ரீதியில் புலிகள் செய்து வரும் தவறான பிரசாரம் முறியடிக்கப்படும்.

தகவல் தொடர்பு முறைகள், சாதனங்கள், பத்திரிகைகள், ஒலிப்பதிவு நாடாக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புளுக்குனாவவில் மீண்டும் விசேட அதிரடிப்படை முகாம்

கொழும்பு, டிச. 13

அம்பாறை மாவட்டம் புளுக்குனாவ விசேட அதிரடிப்படை முகாம் நேற்று முன்தினம் காலை தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட போதிலும் அந்த முகாம் கைவிடப்பட மாட்டாது; அந்த இடத்திலேயே புதிய முகாம் அமைக்கப்படும்.

பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன. இத்தாக்குதல் சம்பவம் குறித்து அவை மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

புளுக்குனாவ முகாம் கண்டி — மகா ஓயா வீதியில் உன்னிச்சைக் காட்டை ஒட்டியதாகவும், மறுபக்கம் கொக்கட்டிச்சோலை, செங்கலடி — பதுளை வீதியை எல்லையாகவும் கொண்டு அமைந்திருந்தது.

உன்னிச்சைக் காடு வழியாக ஊடுருவியே இந்த முகாம் பகுதிக்கு வந்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இதனால் இந்தக் காட்டுப் பகுதி மீது நேற்று முன்தினம் அகோர விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப கதிர்காமரும் விடுகிறதில்லை எண்டுதான் நிக்கிறார் போல!

## 34 புலிகள் பலி?

கொழும்பு, டிச. 13

புளுக்குனாவ விசேட அதிரடிப் படை முகாம் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 34 பேர் பலியானார்கள்; 25 பேர் காயமடைந்தனர்.

'புலிகளின் குரல்' வானொலி இவ்வாறு தகவல் வெளியிட்டதாக 'றொயிட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இத் தாக்குதலில் 36 படையினரும் இரு சிவிலியன்களும் கொல்லப்பட்டதாகவும் 37 படையினர் காயமடைந்ததாகவும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தாக்குதலின் பின்னர் விடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 3 மாணவியரின் சடலங்கள் முல்லைக்கரையில் ஒதுங்கின

லண்டன், டிச. 13

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டுக் கடலில் வீசப்பட்டதாகக் கூறப்படும் மூன்று பாடசாலை மாணவிகளின் சடலங்கள் நேற்று முல்லைத்தீவுக் கடலோரப் பரப்பில் கண்டெடுக்கப்பட்டதாகச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

வெள்ளைச் சீருடையில் சிதைக்கப்பட்ட நிலையில் — கோரைப் பாயால் கட்டப்பட்ட நிலையில் — அப்பகுதி மக்களால் கண்டெடுக்கப்பட்ட இச்சடலங்கள் முல்லைத்தீவு அரச அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அச்செய்தி நிறுவனங்கள் மேலும் தெரிவித்தன.

பி. பி. ஸியின் சிங்களச் சேவையும் இத்தகவலை நேற்றிரவு ஊர்ஜிதப்படுத்தியது.

சடலங்கள் சாக்குகளில் கட்டப்பட்ட நிலையில் கரை ஒதுங்கியதாகவும் — ஒரு மாணவியின் சடலத்தில் பாடசாலைச் சீருடை—

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில் வெள்ளத்துக்கு 20 பேர் பலி

சென்னை, டிச, 13

தமிழ் நாட்டில் தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்துக்கு இதுவரை 20 பேர் பலியாகி உள்ளனர்.

மழை இன்றும் பெய்யும் என்று சென்னை வானிலை அவதான நிலையம் நேற்று தெரிவித்தது. [இ]

## கிழக்கில் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து படை உஷார் நிலை!

மணிலா, டிச. 13

கிழக்கில் புலிகளின் தொடர் தாக்குதல்களைத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும்—

அதற்காகத் தங்களைத் தயார்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் —

ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்ததாக செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

நேற்று முன்தினம் புளுக்குனாவ விசேட அதிரடிப்படை முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதை தொடர்ந்து இராணுவ அதிகாரி இதனைக் கூறியுள்ளார்.

முல்லைத்தீவு தோல்விக்குப் பின்னர் இலங்கை இராணுவத்திற்குக் கிடைத்த மோசமான அடி இது என சர்வதேச செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிலிருந்து புலிகள் கிழக்கிலங்கையில் குவிக்கப்பட்டு வருவதாக இராணுவத்திற்குக் கிடைத்துள்ள உளவுத் தகவல்கள் இராணுவத்தினரை உஷார் நிலைக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 74 தமிழ் இளைஞர் பிணையில்

கொழும்பு, டிச. 13

கடந்த பல மாதங்களாக கொழும்பு மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வடபகுதித் தமிழ் இளைஞர்களில் 74 பேர் நேற்று முன்தினம் அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். [இ-3]

## திருமலையில் நேற்று பரீட்சை நடைபெற்றது

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறாது தடைப்பட்ட ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைகள் நேற்று சுமுகமாக நடைபெற்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அம்பாறை மாவட்டத்தில் சில பரீட்சை நிலையங்களில் நேற்றும் பரீட்சைகள் நடைபெறவில்லை.

கிழக்கில் பரீட்சை மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஆபத்து அலவன்ஸ் கோரி பகிஷ்கரிப்பு நடத்துவது தெரிந்ததே.

(இ-150-3)

## துப்பாக்கி தவறுதலாக வெடித்து எம். பி. காயம்

கொழும்பு, டிச. 13

நித்திரையில் தனது பிள்ளையுடன் படுத்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தற்பாதுகாப்புத் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் காயமடைந்தார்.

காயமடைந்த காலி மாவட்ட ஐ. தே. க. எம். பியான வஜிர அபயவர்த்தனா கோட்டே ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குழந்தை காயம் ஏதுமின்றித் தப்பித்தது.

(இ-3-150)

## குண்டு வெடிப்புக்கு மட்டு நகரில் சிறுமி பலி!

திருகோணமலை, டிச. 13

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் கடந்த புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் முதலாம் ஆண்டு மாணவியான தங்கேஸ்வரன் சர்மிளா என்பவர் இறந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

கடை ஒன்றுக்கு அருகில் இக்குண்டு வெடித்ததாகவும் —

இராணுவத்தினர் அந்தக் கடைக்கு அருகில் நின்றனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## காங்கேசன் நோக்கி பயணிகள் கப்பல்

திருகோணமலை, டிச. 13

திருகோணமலையில் இருந்து 3 பயணிகள் கப்பல்கள் இன்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படவிருப்ப

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிலுநர் தேவை

அச்சுக்கோப்பாளராகவும் ஒப்புநோக்குநராகவும் பயிற்சி பெற விரும்பும் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். **16, 17, 18 - 12 - 96** ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

**பாரதி பதிப்பகம்,**
**430, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/3719)

## சாவகச்சேரி பிரதேச சபை
## 1997 ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

மேற்படி விடயமாக உதயன் பத்திரிகையில் 21 - 10 - 1996 இல் வெளியிட்ட விளம்பரம் தொடர்பாக குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தைகளும் கடைகளுக்குமான கேள்விகள் மீண்டும் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் கடைசித் திகதி:- **18-12-96** முற்பகல் 10-00 மணி வரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- **19-12-96** முற்பகல் 10-00 மணி வரை.

1. கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை
2. கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல. 1
3. கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல. 2
4. மிருசுவில் பொதுச்சந்தை
5. எழுதுமட்டுவாள் பொதுச்சந்தை
6. வரணி மாட்டிறைச்சிக்கடை
7. வரணி ஆட்டிறைச்சிக்கடை
8. கைதடி பொதுச்சந்தை
9. கைதடி ஆட்டிறைச்சிக்கடை
10. கைதடி மாட்டிறைச்சிக்கடை
11. நாவற்குழி ஆட்டிறைச்சிக்கடை
12. நாவற்குழி மாட்டிறைச்சிக்கடை
13. கைதடிச் சந்தைக் கடைகள்
14. கொடிகாமம் சந்தைக் கடைகள்

மேலதிக விவரங்களை பிரதேச சபை தலைமைப் பணிமனையிலோ அல்லது குறிப்பிட்ட உப அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

பு. சுந்தரம்பிள்ளை,
விசேட ஆணையாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

கமநலசேவை நிலையக் கட்டடம்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
10 - 12 - 96

(சி/3717)

## 6 ஆம் மாத நினைவலைகள்



திருமதி
### கமலரட்னாவதி சுந்தரலிங்கம்

தோற்றம்: **30 — 05 — 1943**
மறைவு: **13 — 06 — 1996**

காற்றை யடைப்பது மனதாலே - இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையிலே
சோற்றைப் புசிப்பது வாயாலே - உயிர்
துணிவுறுவது தாயாலே
நேற்று நடந்தவை நிஜமல்ல - நீர்
நீத்தது என்பதும் நிஜமல்ல
மாதங்கள் ஆறின்று வருமுன்னே - உம்மை
மறப்பது என்பதும் எளிதல்ல.

- குடும்பத்தினர்.

236, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(9067)

அமைதித் தீர்வு ஒன்றுக்காக

# புதிய மாகாணக் கோரிக்கையை விட்டுக் கொடுக்கவும் நாம் தயார்

## முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, டிச. 13

தேவைப்படும் பட்சத்தில் எமது கட்சி தென் கிழக்கு மாகாணக் கோரிக்கையைக் கைவிட்டு வடக்கு — கிழக்கு நிரந்தர இணைப்பை ஏற்றுக் கொள்ளவும் ஆயத்தமாக இருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் யாழ். மாவட்ட எம்.பியான டாக்டர் ஐ. எம். இலியாஸ் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் விடுதலைப் புலிகளுடன் நாம் தொடர்பு கொண்டோம். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். ஆயுதத்தை கீழே வைத்துவிட்டுப் பேச அவர்கள் விரும்பவில்லை.

தமிழ்க் கட்சிகளுடன் நான் பேசியபோது, பலமான புலிகளுடனும் பேசவேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.

மூன்றாம் சக்தி ஒன்றின் மத்தியஸ்தத்துடன் தான் பேசவேண்டும் என்பதில் புலிகள் நம்பிக்கையாக இருந்து வருகின்றனர்.

எமது பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா கிழக்கு அபிவிருத்திக்குப் புலிகள் உதவ வேண்டும் என்று கேட்டபோது அதற்கும் புலிகள் ஆதரவு வழங்க சம்மதம் தெரிவித்தனர்.

அனைத்து கட்சிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் புலிகளின் பங்களிப்பு முக்கியமானது என்பதில் ஒருமித்த கருத்துக்கொண்டுள்ளன. இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## சமய சந்நிதிகளில்

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளி தோறும் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளில்— 'கீதை சொன்ன கண்ணன்' என்னும் பொருளில் சைவப் புலவர் சி.வேலாயுதம் சமயச் சொற்பொழிவாற்றுவார். நிகழ்ச்சி மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகும். (அ)

★ ★ ★

அகில இலங்கை திருமுறை அலுவலகத்தில் நடைபெற்று வந்த திருமுறை முற்றோதல் இன்று மு.ப. 10 மணிக்கு நிறைவு பெறும். (அ)

★ ★ ★

ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர் சிவன் கோயிலில் ஆறு வருடங்களின் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை திருவெம்பாவைப் பூசை ஆரம்பமாகின்றது.

இம்மாதம் 24 ஆம் திகதி இரவு நடேசர் ஆருத்திரா அபிஷேகமும் அடுத்த நாள் உதயத்தில் ஆருத்திரா தரிசனமும் வழமை போல் வெகு சிறப்பாக நடைபெறும். (அ)

★ ★ ★

வண்ணை, சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் காலை 8 மணிமுதல் விநாயக புராண படன பூர்த்தி நடைபெறும். கணபதி ஹோமம், சங்காபிஷேகம் நடைபெற்று பி.ப. 3 மணிக்கு கஜமுகா சங்காரம் இடம்பெறும்.

★ ★ ★

மானிப்பாய் வடக்கு பெரிய தம்பிரான் ஆலய வருடாந்த திருவெம்பாவைப் பூசை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும். (அ-90)

★ ★ ★

கடந்த ஒரு மாத காலமாக வழக்கம்பரை அம்மன் கோயிலில் நடைபெற்று வந்த காசி காண்ட புராணப் படிப்பு பூர்த்தி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் நிறைவு பெறும். உரையாசிரியர் சைவமணி சி. மருதப்பிள்ளையைக் கௌரவித்து பாராட்டும் வைபவம் இங்கு நிகழும். இந்தப் புராணப் படிப்பு இவ்வாலயத்தில் சென்ற கால் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து படிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (அ-30)

## கண்ணீர் அஞ்சலி

பண்டிதர்
### சதாசிவம் பொன்னுத்துரை

சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த இசை ஆசிரியர் வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவன் அவர்களின் அன்புத் தந்தையும், தமிழ் அறிஞருமான
பண்டிதர் சதாசிவம் பொன்னுத்துரை
அவர்கள் 07-12-96 அன்று இறைபதம் எய்தியமை குறித்த கண்ணீர் அஞ்சலி

கன்னித் தமிழிங்கு உன்னதமாய் ஓங்கிடவே
பன்னிய பணிகளவை சொல்லில் அடங்கிடுமோ
எண்ணரிய சேவைகளை எம்மவர்க்காய் ஈந்து சென்ற
புண்ணியனே! இசை வளர்க்கும் புத்திரனை ஈன்றவனே
கண்ணீரை நாமிங்கு காணிக்கை ஆக்கி நின்றோம்.

தென்மராட்சி இசை ஆசிரியர் சங்கம்.

(சி/3716)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசரத்தினம் இரத்தினம்

சேச்லேன் தாவடியைச் சேர்ந்த திருமதி இராசரத்தினம் இரத்தினம் காலமானார்.

இவர் இராசரத்தினத்தின் (இளைப்பாறிய தபால் அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை - தங்கம்மா ஆகியோரின் அருமை மகளும், திருமதி காயத்திரி சோமசுந்தரம், பாலச்சந்திரன் (பிரான்ஸ்), சிவயோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோமசுந்தரம் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். மாநகராட்சி மன்றம்), லூசி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவகுருநாதன் (சட்டத்தரணி), சிதம்பரநாதன், நவரத்தினம் (இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி - முன்னாள் பொது முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி), திருமதி மகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச்சகோதரியும், அகிலினி (மாணவி, A/L 97, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), திஷாந்தி (மாணவி A/L 98, யா/ இந்து மகளிர் கல்லூரி), சுகந்தினி (ஆண்டு 9 மாணவி, யா/இந்து மகளிர் கல்லூரி), சுகான் (பிரான்ஸ்), சமந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், வைத்தியநாதரின் (இளைப்பாறிய ஆசிரியர்) மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-12-96 வியாழக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. சோமசுந்தரம்
(மருமகன்)

சேச் லேன்,
தாவடி,
கொக்குவில்.

(44089)

## துரையப்பா மார்க்கண்டு

காரைநகர், சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட துரையப்பா மார்க்கண்டு 10 - 12 - 1996 அன்று பசறையில் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும், சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், ஜெகதீசன் மற்றும் நடராசா (மல்லாவி), இராஜேஸ்வரி (பசறை), சதாசிவம் (கனடா), நாகேஸ்வரி ஆகியோரது அன்புத் தந்தையும், மங்களாம்பாள், மிதுனராணி, பாலராணி, தீபசோதி, உலகநாதன் (பசறை), இந்திராதேவி (கனடா) ஆகியோரது அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முருகேசு (ஈழத்துச் சிதம்பர ஆதீனகர்த்தா), சிவக்கொழுந்து மற்றும் கார்த்திகேசு ஆகியோரது அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-12-96 அன்று பசறையில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்;
மா. சண்முகநாதன்
(மகன்)

198 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(44085)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## பழைய மாணவர் சங்க விவகாரம்:

# யாழ். கல்வி அதிகாரிகளின் உத்தரவு

# அதிகாரத் துஷ்பிரயோகச் செயல்!

ஒரு நாட்டின் பிரஜை, அவரது செயற்பாடுகள் தொடர்பாகச் சில உரிமைகள், சுதந்திரங்களைச் சட்டபூர்வமாகப் பெறும் அதே வேளையில், அவரது செயற்பாடுகள் பலவித கட்டுப்படுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன. ஒருவரின் செயற்பாடுகள் எப்படியான கட்டுப்படுத்தல்களுக்கு உள்ளாக்கப்படக்கூடாது, எப்படியான கட்டுப்படுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்பது, ஒரு நாட்டின் பிரஜைகள் மனித வாழ்க்கை தொடர்பாக எப்படியான விளக்கங்களைக் கொண்டுள்ளனர், அதன் மூலம் எப்படியான கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர் என்பதாலேயே பெருமளவில் நிர்ணயிக்கப்படும்.

இவைகள் தொடர்பான முடிவுகள் எப்படி எடுக்கப்படுகின்றன என்பது, குறிப்பிட்டவொரு நாட்டின் பிரஜைகள் எப்படித் தம்மை ஆட்சி செய்து கொள்கின்றனர்; தம்மை ஆளப்பட விடுகின்றனர் என்பதில் தான் தங்கியுள்ளது.

ஒரு நாட்டின் பிரஜைகளது அறிவும், ஆராயும் தன்மையும் போதிய அளவிற்கு வளர்க்கப்படாது போனால், இவைகளினடிப்படையில் தான் மனித வாழ்க்கை தொடர்பான விளக்கங்களும், ஆகவே கொள்கைகளும், ஆகவே பிரஜை ஒவ்வொருவரினது செயற்பாடுகள் தொடர்பான கட்டுப்படுத்தல்கள் இல்லாத நிலையும், கட்டுப்பாடுகள் பெருமளவில் இருக்கும் நிலைகளும் காணப்படும்.

பொதுவாகக் கூறினால், நாடாளுமன்ற ஜனநாயகமும், ஒற்றையாட்சியும் இருக்குமொரு நாட்டில், பிரஜைகளின் செயற்பாடுகளில் எவையெவைகளுக்கு எப்படியெப்படியான கட்டுப்படுத்தல்கள் இருக்கக் கூடாது, எவையெவைகளுக்கு எப்படியெப்படியான கட்டுப்படுத்தல்கள் இருக்க வேண்டும் என்ற தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்தின் கைகளில் விடப்படுகிறது. இவைகள் தொடர்பான முடிவுகள், நாட்டின் சட்டங்களாகின்றன.

இப்படி உருவாக்கப்படும் சட்டங்கள் நிர்வாகமூடாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

நாடாளுமன்றத்தினால் எடுக்கப்படும் முடிவுகள் எப்படியானதாகவிருக்கும் என்பது, உண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரியப்பட்டவர்களுக்கு மனித வாழ்க்கை பற்றி எப்படியான விளக்கங்கள் உள்ளன என்பதில் தான் தங்கியிருக்கும். அதாவது நாடாளுமன்ற உறுப்பினர்களது அறிவு வளர்ச்சி, ஆராயும் தன்மை வளர்ச்சி என்பவைகளையே அது பொறுத்தது. ஆகவே ஒரு நாட்டின் பிரஜைகள் அவர்களது செயற்பாடுகள் தொடர்பாக எப்படியான கட்டுப்படுதல்களுக்குள்ளாவர், எப்படியான கட்டுப்படுத்தல்களுக்கு உள்ளாகமாட்டார் என்பது, அவர்கள் எப்படியானவர்களை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்கின்றனர் என்பதையே பொறுத்தது.

தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் எடுக்கப்படும் தீர்மானங்களை ஏற்பதும், நிராகரிப்பதும், ஜனநாயகம் இருக்கும் நாட்டில் அனுமதிக்கப்படுகிறது. மறுபுறத்தில், மனிதசெயற்பாடுகள்தொடர்பான நாடாளுமன்ற முடிவை (சட்டத்தை) எதிர்ப்பதும், அதை எதிர்க்க உரிமைகள் வழங்கப்படுவதும், பிரஜைகளது அறிவு வளர்ச்சி, ஆராயும் தன்மை வளர்ச்சி நிலைகளையே பொறுத்தது.

> **பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் தொடர்பாக குடாநாட்டின் கல்வி வட்டாரங்களில் எழுந்திருக்கும் சர்ச்சை தொடர்பாக 'சேது' என்பவர் எழுதிய கட்டுரை கடந்த 22, 23 25 ஆம் திகதிகளில் உதயனில் பிரசுரமானது. அதையொட்டி மற்றொரு வாசகர் எழுதிய கட்டுரை இங்கு இடம் பெறுகின்றது. இப்பிரச்சினை தொடர்பாக வாசகர்கள் மற்றும் கல்விமான்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்ந்து அவ்வப்போது பிரசுரமாகும். (ஆ-ர்)**

நாடாளுமன்றத்தால் நாட்டின் "சட்டங்கள்" என உருவாக்கப்பட்டவைகளை மக்களதும், நாட்டினதும் நலன்களைப் பாதுகாக்கும் வகையிலும், சமூகத்தினையும், நாட்டினையும் முன்னேற்றும் வகையிலும் திறம்பட நடைமுறைப்படுத்த, பல்வேறுபட்ட நிர்வாக அலகுகள் உருவாக்கப்பட்டு, செயற்படுத்தப்படுகின்றன.

இந்த நிர்வாக அலகுகள், நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களைத் திறம்பட நடைமுறைப் படுத்த, பல்வேறுபட்ட நிர்வாக ஒழுங்குகளை உருவாக்கியுள்ளன.

இப்படி, "கல்வி" என்பது தொடர்பான சட்டங்களைத் திறம்பட நடைமுறைப் படுத்த உருவாக்கப்பட்டதே, **கல்வி அமைச்சும், கல்வித் திணைக்களமும்** ஏனைய உப அமைப்புக்களுமாகும். இந்த அமைச்சு இலங்கைப் பிரஜைகளின் "கல்வி" தொடர்பான செயற்பாடுகளை, இலங்கைப் பிரஜைகளின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஏற்றவகையில் நிர்வாகம் செய்யும் எதிர்பார்ப்பில் உருவாக்கப்பட்டது.

இந்த நிலையில், கல்வி அமைச்சின் நிர்வாகமானது, அதற்கென ஒதுக்கப்பட்ட "கல்வி" விடயம் தொடர்பானது மாத்திரமே; **கல்வி கற்றல், கற்பித்தல்** என்பவைகள் தொடர்பானது மாத்திரமே.

இந்த அமைச்சின் நிர்வாக ஒழுங்குகள், **கல்வி கற்போர் கல்வி கற்பிப்போர், கல்வியைப் புகட்டும் அமைப்புகள்** (கல்லூரிகள், பாடசாலைகள்), **கல்வி புகட்டுவோரைத் தயார்ப்படுத்தும் அமைப்புகள்,** இவைகளை நிர்வாகம் செய்வதில் **ஈடுபடும் கல்விப் பணிப்பாளர் (D.E), பிரதிக் கல்விப்பணிப்பாளர் (D.D.E), ஏனையோர்களின் "கல்வி" தொடர்பான செயற்பாடுகளை மாத்திரமே கட்டுப்படுத்தும். ''கல்வி''** தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பான செயற்பாடுகளை, ''கல்வி'' என்பதில் தொடர்பானவர்களையே, கல்வி அமைச்சின் நிர்வாக ஒழுங்குகள் அதிகம் கட்டுப்படுத்த முடியாது.

அதே வேளையில், கல்வி'' என்ற செயற்பாட்டுடன் தொடர்பானவொருவர் தகாத முறைகளில் நடந்தால், அவர் நாட்டின் சட்டங்களின் கீழ் தண்டிக்கப் படமுடியும். இப்படியான தகாத முறைச் செயற்பாடுகள் ''கல்வி'' என்பதுடன் தொடர்பான இருவர்களிடையே, ''கல்வி'' தொடர்பான அமைப்பினுள் நடைபெற்றாலும், அதில் சம்பந்தப்பட்டவர்கள் நாட்டின் சட்டங்களின் கீழ்த் தண்டிக்கப்படமுடியும். கல்வி அமைச்சின் உள்விசாரணைகள் வேறு; நாட்டின் சட்டங்களின் கீழ் நீதிமன்றத்தால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவது வேறு.

வெவ்வேறு செயற்பாடுகள் தொடர்பாக நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் நிர்வாகம் அமைக்கப்படுகிறதேயன்றி, ஒரு நிர்வாக அலகின் பொறுப்பாளரால் சட்டங்கள் நாட்டில் உருவாக்கப்படுவதில்லை.

"கல்வி" என்பதைப் பொறுத்தமட்டில், நாட்டின் சட்டங்களுக்கிணங்கக் கல்லூரி, பாடசாலைகளில்

ஏ. எஸ். உதயகுமார்

கல்வி கற்று வந்தவொருவர் எப்போது "கல்வி கற்றல்" என்ற செயற்பாட்டில் ஈடுபடாது நிறுத்திக் கொள்கிறரோ அன்று முதல் அவர் "மாணவர்" அல்லர். அவரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும், உரிமையும் கல்வி அமைச்சுக்கும், கல்வித் திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டங்களின் DDEக்களுக்கும், அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் சட்டரீதியாக இல்லை.

குறிப்பிட்டவொரு கல்லூரி, பாடசாலை, பல்கலைக்கழகம் போன்றவற்றில் கல்விகற்று நீங்கிய பழைய மாணவர்கள், பல்வேறுபட்ட சட்டரீதியிலான நோக்கங்கள், குறிக்கோள்களைக் கொண்டு, அமைப்புக்களை உருவாக்கிச் செயற்பட முடியும். இப்படி உருவாக்கப்படும் ஒரு கல்லூரிப் பழைய மாணவர்களது அமைப்புகள் பின்வரும் நோக்கங்கள், குறிக்கோள்களை உடையதாக இருக்க முடியும்.

1) குறிப்பிட்ட கல்லூரிப் பழைய மாணவர்களுக்கிடையிலான தொடர்புகள், உறவுகளை வலுப்படுத்துவது; அவர்களது அறிவு, ஆராயும் தன்மை என்பவைகளை வளர்ப்பது; தொழில் துறைகளில் ஈடுபடக் கல்வி, பயிற்சிகள் பெற உதவுவது; சமூகத்தின் அறிவு ஆராயும் தன்மை வளர்ச்சிகளுக்கு உதவுவது போன்றவை மாத்திரம்;

2) தமது முன்னைய கல்லூரியின் முன்னேற்றம், அபிவிருத்தி போன்றவைகளிலும், தமது முன்னைய கல்லூரி மாணவர்களின் நலன்களைப் பேணவும், மாணவர்களுக்கான சேவைகளில் ஈடுபடுதல் என்பவைக்கு மாத்திரம்;

3) முதலாவதிலும், இரண்டாவதிலும் கூறப்பட்டவைகளை இணைத்துச் செயற்படுத்தல்.

இந்த நிலையில், குறிப்பிட்டவொரு கல்லூரியின் பழைய மாணவர்களால் உருவாக்கப்படும் ஓர் அமைப்பினது செயற்பாடுகள், உண்மையில், அந்த அமைப்பின் சட்ட யாப்பினில் நோக்கங்கள், குறிக்கோள்கள் எவை எனக் குறிப்பிடப்பட்டிருப்பவைகளால்தான் கட்டுப்படுத்தப்படும்.

குறிப்பிட்ட ஒரு கல்லூரியின் பழைய மாணவர்களது அமைப்பொன்றினது குறிக்கோள்கள், நோக்கங்கள், உப-செயற்பாடுகள் என்பவைகள் பின்வருமாறு இருக்கும்படியும் **சட்டயாப்பு** (Constitution) அமைக்கப் படமுடியும்:

1) பாடசாலையின் பொது மேம்பாட்டிற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவது;

2) மாணவர்கள் பாடசாலைக்குத் தினமும் செல்வதை ஊக்குவித்தல்;

3) மதிய உணவு வழங்கும் திட்டத்தினைத் திறமையுடன் நடைமுறைப்படுத்த உதவுதல்;

4) மலசல கூட, நீர் விநியோக வசதிகளை அமைத்தல்;

5) கல்லூரியின் விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை ஊக்குவித்து, அவற்றை நடத்த உதவுத்ல்;

6) கல்லூரியின் கலை, கலாசார, மற்றும் விழாக்களை நடத்த உதவுதல்;

7) மேலதிக மாணவர்களுக்கு இடவசதிகள், கருவிகள், சாதனங்களைப் பெற உதவுதல்;

8) பன்முகப்படுத்தப்பட்ட, முறைசாரா, மற்றும் கல்வித்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்;

9) கல்லூரியையும், சமூகத்தினையும் இணைக்க உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்;

10) தேசிய, சமயச்செயற்பாடுகளில் கல்லூரியை ஈடுபடுத்த உதவுதல்.

இவைகள் அனைத்தும் கல்லூரியுடனும், அதன் மாணவர்களுடனும் மாத்திரமே தொடர்பானவை. இப்படியான சட்ட யாப்பினில் கல்லூரிப் பழைய மாணவர்களின் நலன்கள், முன்னேற்றங்கள் உள்ளடக்கப்படவில்லை. இந்த சட்ட யாப்பானது பழைய மாணவர்களின் அமைப்பினது செயற்பாடுகளைப் பள்ளிக்கூடத்தின் செயற்பாடுகளுடன் கட்டுப்படுத்தியுள்ளது; மட்டுப்படுத்தியுள்ளது.

பல தசாப்தங்களாக, யாழ். குடாவின் கல்லூரிகளது பழைய மாணவர்கள் தமது சிந்தனைக்கும், ஆகவே கொள்கைகளுக்கும் ஏற்ற விதத்தில், மேற்குறிப்பிட்ட சகல விடயங்களையும் இணைத்த வகையில், பழைய மாணவர் அமைப்புக்களை உருவாக்கிச் செயற்பட்டுவந்துள்ளனர். கல்வித்திணைக்கள நிர்வாகிகள், கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் காலத்திற்குக் காலம் மாறியபோதும், கல்லூரிகளின் பழைய மாணவர்களது அமைப்புகள், நிரந்தரமாகவும், என்றும் தத்தமது கல்லூரிகளின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டும் தத்தமது கல்லூரிகளை முன்னேற்றி வந்துள்ளனர்.

ஆனால், இப்படியான பழைய மாணவர்களது அமைப்புகள் கல்வி அமைச்சின் எந்தவித கட்டுப்படுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட முடியாது இருந்து வந்துள்ளன. அத்துடன் கல்லூரி மாணவர்களிடமிருந்து சில விடயங்கள் தொடர்பாகப் பூரண ஒத்துழைப்பைப் பெற முடியாததாலேயே அவற்றைச் செய்துவந்துள்ளன.

இங்கு தான் கல்வி அமைச்சுக்கும் கல்லூரிப் பழைய மாணவர்களுக்கும் பரஸ்பர ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

அதே வேளையில், பழைய மாணவர் அமைப்பின் செயற்பாடுகளைக் கல்வி அமைப்பு கட்டுப்படுத்த, தமது அதிகாரத்தின் கீழ் இருக்கும் அதிபர்கள் பழைய மாணவர் அமைப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலையையும் உருவாக்க வேண்டியுள்ளது:

இக்கட்டத்தில் இரண்டு கேள்விகள் முக்கியமாகின்றன. அவையாவன:

1 பழைய மாணவ அமைப்புக்களை அதிபரது கட்டுப்பாட்டில் வைப்பதனூடாக, செய்யப்படவிருக்கும் ''மேலதிக'' செயற்பாடுகள் எவை?

2 பழைய மாணவ அமைப்புக்களை அதிபரது கட்டுப்பாட்டில் வைப்பதனூடாக, தடுக்கப்படவிருக்கும் செயற்பாடுகள் எவை?

இவைகள் ஆராய்ந்தறியப்படவேண்டியவையாகும்.

அண்மைக் காலங்களில், யாழ். குடாவின் கல்லூரிகளின் பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுவந்த அமைப்புக்கள் தொடர்பாகப் பெரும் கட்டளையீடுகளும், விவாதங்களும், கருத்துப்பரிமாறல்களும் இடம்பெற்று, கல்லூரிகளின் பழைய மாணவர் அமைப்புகளுக்கும், அதிபர்களுக்கும், கோட்டக்கல்விப்பணிப்பாளர்கக்குமிடையே விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு முக்கிய காரணமாகவிருப்பது உடுவில் **கோட்ட** உதவிக் கல்விப் பணிப்பாளர் பழைய மாணவர் அமைப்புகளுக்குக் கட்டளையீடுகளைச் செய்துள்ளதாக **"உதயன்"** பத்திரிகையில் (08-10-1996, பக்கம் –03) வெளிவந்த செய்தியாகும். அந்தச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது–

''... பழைய மாணவர் சங்கங்களின் கணக்குகள், நிலுவைப் பணங்கள் இருப்பின் அவை முறைப்படி சரிபார்க்கப்பட்டு, அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் **அறிவித்துள்ளார்.**

இந்தச் செய்தி தொடர்பாக, உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசாவோ அல்லது கல்வி வலயம் - 2கல்விப் பணிப்பாளரோ **மறுப்பறிக்கையை "உதயன்"** பத்திரிகையில் விடவுமில்லை, அப்படி ஒரு மறுப்பறிக்கை இவர்களால் பகிரங்கமாக விடப்படவுமில்லை. இது, திரு. சு. இரத்தினராசா பத்திரிகைச்செய்தி சரியானது என உறுதிப் படுத்தியதையே எடுத்துக் காட்டுகிறது.

மறுபுறத்தில், நொவெம்பர் மாதம் 22, 23, 25 ஆம் திகதிகளில் **"உதயன்"** பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகளில், கல்லூரிகளின் பழைய மாணவர் அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றியும், உடுவில் கோட்ட உதவிக்

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**நுளம்புத் தொல்லையா?**

உடல் நலத்திற்கு தீங்கற்ற வேப்பம் பிண்ணாக்கை உமியுடன் கலந்து புகைப்பதால் நுளம்புத் தொல்லையின்றி நன்கு தூங்கலாம். அண்ணா கோப்பிக் கடைகளில் கிடைக்கும்.- மில்க்வைற்.

(44066)

**ஆங்கிலம், கணிதம்**

ஆண்டு 6-11 விசேடமாகக் கற்பிப்பதால் உயர்ந்த பெறுபேறுகளை 97 இல் பெற முடியும். London Inter ஆசிரியர். இல. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.

(44078)

## சனசமூக நிலைய நன்கொடை

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்டதும் தற்போது இயங்குகின்றதுமான சனசமூக நிலையங்களுக்காக உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட நன்கொடை அந்தந்த சனசமூக நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார். (இ-5)

## கப்பலில் வரும் பொருள்கள் மறைவு?

கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி உணவு, அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுவரும் கப்பல்களிலிருந்து பொருள்கள் காணாமல் போகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வாதுவ கப்பலில் தனியாருக்கு எடுத்துவரப்பட்ட பொருள்களில் பெருந்தொகையான பொருள்கள் காணாமல்போய் விட்டதாக அந்தக் கப்பலில் பொருள்களை ஏற்றி வந்த தனியார் வர்த்தகர்கள் சிலர் தெரிவித்தனர். (இ173)

## கால் நடைகளை பிடிக்க நடவடிக்கை

சாவகச்சேரி நகரப் பகுதியில் கட்டாக் காலியாகத் திரியும் ஆடு, மாடுகள் பிடிக்கப்பட்டு வருகின்றன.

இவை பயிர்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தி வருகின்ற காரணத்தினால் சாவகச்சேரி நகரசபை இந் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு பிடிக்கப்படும் ஆடு, மாடுகளுக்கு தண்டப் பணம் அறவிடப்படுகிறது.

ஆடு ஒன்றிற்கு 25 ரூபாவும் குட்டி ஆடுகளுக்கு 15 ரூபாவும் மாடு ஒன்றுக்கு 30 ரூபாவும் அறவிடப்படுகிறது. (இ-31)


**கலைமகள் கல்வி நிலையம்**

ஏழாலை மேற்கு

**A/L 97, 98**

கலை, வர்த்தக வகுப்புகள்

நடைபெறுகின்றன.

**ஆண்டு 6 - 11 வகுப்புகள்**

14-12-96 அன்று **ஆரம்பம்.**

- நிர்வாகி

(9060)



**ஈசன் கல்வி நிலையம்**

**கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.**

**1997 ஆம் கல்வியாண்டுக்கான 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகள்**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு:

கணிதம் — திரு. கணேந்திரன்
தமிழ் — திரு. சின்னத்தம்பி
விஞ்ஞானம் — திரு. சுதாகர்
சமூகக்கல்வி — திரு. கோபி
ஆங்கிலம் — திரு. தெய்வதவபாலன்
வர்த்தகம் — திரு. கலைக்குமரன்
சமயம் — திரு. முருகவேள்

ஆரம்பம்: **14-12-96** சனி **9.00 a.m.**

புலமைப்பரிசில் வகுப்புகளும் ஆரம்பித்துள்ளன.

(44083)


## நீங்கா நினைவில் ஓராண்டு நிறைவு

மலர்வு: 1977 — 12 — 27



உதிர்வு: 1995 — 12 — 10

**செல்வி கமலாஜினி புஸ்பரத்தினம்**
(கிளி)

(1997 ஆம் ஆண்டு கலைப்பிரிவு மாணவி, யா/கொ. இ. கல்லூரி)

**திதி:- 1996 - 12 - 13**

பாசத்தைப் பகிர்ந்து
பண்போடு வளர்ந்து
பிறந்த மண் திருநெல்வேலியைப் பிரிந்து
பனையில் கதிதேடி, பாருலகம் சென்றுவிட்டாய்!
வாராயோ ஒரு தரம்;
உன் பூ முகத்தை காட்டாயோ மறுதரம்.

உமது பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(சி/3715)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி அழைப்பும்



**திருமதி சோமசுந்தரம்-அன்னப்பிள்ளை**
( நீர்வேலி )

14-11-96 அன்று சிவபதம் அடைந்த எமது தாயாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை 14-12-96 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து மதிய போசனத்தில் பங்குபற்றுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி கண்மலர் புவனேந்திரன்
ஆசிரியை (மகள்)

அத்தியார் இந்துக் கல்லூரி அருகாமை
நீர்வேலி.

(43968)


**யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்**

**க.பொ.த. உயர்தர வகுப்பு அனுமதி 1998**
**(கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்)**

மேற்படி வகுப்புகளுக்கு உரிய அனுமதிக்கு **20-12-96** க்கு முன் விண்ணப்பிக்கவும்.

சகல வகுப்புகளுக்கும் விடுதி வசதிகள் உண்டு.

(44081) - அதிபர்


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உபதலைவரும், முதுபெருந் தமிழறிஞருமான

**பண்டிதர் ச. பொன்னுத்துரை**

அவர்களின்

இழப்பு ஈடுசெய்யவியலாதது.
அன்னவருக்கு எமது கண்ணீர் அஞ்சலி உரித்தாகுக.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.
யாழ்ப்பாணம்.

(4408 2)

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி செல்வநாயகம் இராசம்மா**

எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு. செ. பத்மநாதன் அவர்களின் அன்புத் தாயார்

10-12-1996 அன்று காலமானார். இவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம். அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம்,
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(44084)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



**திருமதி நாகரெத்தினம் கந்தையா**

திருமதி நாகரெத்தினம் கந்தையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 11 – 12 – 96 புதன்கிழமை காலை வில்லூன்றி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியம் (சபிண்டீகரணம்) இன்று 13-12-96 வெள்ளிக்கிழமை நண்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் இவ்வைபவத்தில் கலந்து, நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

93/7, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

[9040]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# யாழ். கல்வி அதிகாரிகளின்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கல்விப் பணிப்பாளரின் ,'கட்டளையிடுகை'' தொடர்பாகவும் மேலதிக விளக்கங்கள் கோரப்பட்டிருந்தன. ஆனால், திரு சு. இரத்தினராசாவின் "கட்டளையிடுகை'' தொடர்பாக வலயம் – 02 கல்விப்பணிப்பாளரோ அல்லது வேறு வலயக் கல்விப் பணிப்பாளரோ இன்றுவரை எந்தவித விளக்கங்களையும் கொடுக்கவுமில்லை; கல்லூரி அதிபர்களுக்கு எந்தவித மேலதிக விளக்கச் சுற்றுக்களை விடவுமில்லை.

இவைகள், யாழ். குடாநாட்டின் கல்விப்பணிப்பாளர்கள் அனைவரும், திரு. சு. இரத்தினராசா அவர்கள் "கல்வி அமைச்சின் சுற்றறிக்கை'' என்றதன் பெயரில் பழைய மாணவர் சங்கங்களுக்கு விடுத்த "கட்டளையிடுகை'' சரியானது என்பதை ஆமோதிக்கும் வகையில் அமைந்துள்ளது. இவற்றிற்கு மேலாக, கல்வி அமைச்சானது திரு. சு. இரத்தினராசா ஊடாகப் பொது மக்களின் அமைப்புக்களுக்குக் கட்டளையீடுகளைச் செய்துள்ளதாகிறது.

இங்கு தான் பிரச்சினையே ஆரம்பமாகிறது. இங்கு தான் இலங்கைப் பிரஜைகள் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்படும் சட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகிறார்களா, அல்லது நிர்வாக அலகுகளும் நாட்டின் சட்டங்களை உருவாக்க முடியுமா என்ற கேள்விகள் எழுகின்றன.

இலங்கையிலும், சகல நாடாளுமன்ற ஜனநாயக நாடுகளிலும், நாடாளுமன்றமே சட்டங்களை இயற்றும் அதியுயர் அமைப்பாகும். ஒரு நாட்டின் சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றுவதேயன்றி, வெவ்வேறு நிர்வாக அலகுகளல்ல.

கல்லூரிகளின் பழைய மாணவர்கள் எப்படியான நோக்கங்கள், குறிக்கோள்களுடன் தமக்கு அமைப்புக்களை உருவாக்கிச் செயற்படுத்த முடியும் என்று கட்டளையிடுவதற்கோ, அல்லது ஏற்கனவே செயற்பட்டுவரும் பழைய மாணவர் சங்கங்களைச் செயற்பட முடியாதெனக் கட்டளையிடவோ, அல்லது சங்கங்களின் பணம், கணக்குகளை அதிபரிடம் ஒப்படைக்கும்படி கட்டளையிடவோ கல்வி அமைச்சுக்கோ, அதன் நிர்வாகிகளுக்கோ எந்தவித அதிகாரமுமில்லை. இலங்கையின் சட்டங்கள் அப்படியான அதிகாரங்களைக் கல்வி அமைச்சுக்குக் கொடுக்கவில்லை.

உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரான திரு சு. இரத்தினராசா அவர்கள் கல்வித் திணைக்களத்தின் நிர்வாகியேயன்றி, சட்டமியற்றும் நாடாளுமன்ற அதிகாரமும் கொண்டவரல்லர். பொது சனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக நீதி வழங்கும் நீதிமன்ற அதிகாரம் உள்ளவரும் அல்லர்; நாட்டில் சட்டம், ஒழுங்குகளை நிலை நாட்டும் பொலீஸுமல்லர்; கல்வித் திணைக்களம் அவரை இவைகளைச் செய்ய நியமித்து இருக்கவுமில்லை.

கல்வி அமைச்சுச் செயலரின் உள் சுற்றில், திரு சு. இரத்தினராசா இட்ட "கட்டளையிடுகை'' போல் எதுவும் கூறப்பட்டிருக்க முடியாது. நாட்டின் நிர்வாகத்தினைச் செய்யும் அலகுகள், சட்டங்கள் தொடர்பாகத் தவறுகளை விடுவது குறைவு. ஆனால், தவறுகள் விடுவதில்லை என்பதற்குமில்லை. எது விதத்திலும், இப்படியான சிறுவிடயத்தில் ஓர் அமைச்சினது செயலாளர் தவறு விடுவது என்பதுமிக மிகஅபூர்வம்.

கல்லூரிகளின் பழைய "மாணவர்கள்'' ஆக இருந்த காரணத்திற்காக, கல்லூரிகளின் பழைய மாணவர்களால் உருவாக்கப்படும் அமைப்புக்கள் எல்லாம், கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இயங்க முடியும் என்பதற்கில்லை. முன்னைய ஆசிரியர்களின் அமைப்பெல்லாம், கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இயங்கவேண்டும் என்பதற்கில்லை. இதைப் போலவே, முன்னர் வங்கிகளில் வேலை செய்தோர்களின் அமைப்புக்கள் நிதி அமைச்சின் கீழ்தான் இயங்க முடியும்; முன்னர் படைகளில் பணியாற்றியவர்களின் அமைப்புக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தான் செயற்பட முடியும் என்பது வெறும் பித்தலாட்டமாகும். இப்படியான சட்டம் உலகின் எந்த நாட்டிலும் இல்லை.

அப்படியாயின், திரு. சு. இரத்தினராசாவும், யாழ். குடாவின் கல்விப்பணிப்பாளர்களும் விளையாடும் "கண்ணா மூச்சி விளையாட்டு'' உண்மையில் என்ன என்பது ஆராய்ந்தறியப்பட வேண்டியதொன்றாகும்.

கல்வி, உயர் கல்வி அமைச்சுச் செயலரால் 21 ஜூன் 1995 இல் கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தினடிப்படையில் தான் திரு.சு.இரத்தினராசா அவர்கள், கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்களுக்குக் கட்டளையீடுகளைச் செய்துள்ளார் என உணர்த்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சுற்று நிருபத்தில், பழைய மாணவர் சங்கங்கள் நிறுவுவது தொடர்பாகக் கல்விப் பணிப்பாளரின் 1964 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்கச் சுற்று நிருபத்திற்கேற்பப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கும் படி கேட்கப்பட்டுள்ளது.

1964 ஆம் ஆண்டுச் சுற்று நிருபத்தில் பள்ளிக்கூடங்களில் Past Pupils 'Associa-tion களை உருவாக்கும்படியும், அந்தப் Past Pupils' Association எப்படியான சட்டயாப்பினைக் கொண்டிருக்க வேண்டும், எவையெவைகளை நோக்கங்கள், குறிக்கோள்கள், உபசெயற்பாடுகளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பனவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அதில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள், குறிக்கோள்கள், உப-செயற்பாடுகளே இக்கட்டுரையில் 10 விடயங்களாக ஏற்கனவே தரப்பட்டவைகளாகும்.

பாடசாலை ஒவ்வொன்றிற்கும், இந்த நோக்கங்கள், குறிக்கோள்கள், உபசெயற்பாடுகளைக் கொண்ட Past Pupils' Association களை பழைய மாணவரின் ஒத்துழைப்புடன் உருவாக்கி, அதற்கு கல்லூரிகளின் அதிபர்களைத் தலைவர்களாக வைத்து அவர்களே நிதிக்குப் பொறுப்பாகவும், காசோலைக்குக்கையொப்பமிடுபவராகவும் வைக்கும்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்று நிருபமானது மிகவும் தெளிவாக விடயங்களைக் கூறியுள்ளது. அது கல்லூரிகளில், கல்லூரிகளால் நிறுவப்பட்ட, நிறுவப்படும் Past Pupils' Associations, பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இப்படியான Past Pupils Associations பழைய மாணவர்களின் நலன்கள், முன்னேற்றம் தொடர்பாகச் செயற்படுவதற்கான அமைப்புகளல்ல. இவைகள் கல்லூரியினதும், மாணவர்களதும் முன்னேற்றத்திற்கும், வேறு சில செயற்பாடுகளுக்கும் **கல்லூரி நிர்வாகத்தால்** உருவாக்கப் படுபவையாகும்.

ஒரு கல்லூரியின் பழைய மாணவர்கள் அக்கல்லூரியின் நிர்வாகத்தினால் உருவாக்கப்படும் Past Pupils' Association இல் தான் அங்கத்துவம் வகிக்க முடியும், அவர்கள் கல்வி அமைச்சும், கல்லூரியும் கூறும் நோக்கங்கள், குறிக்கோள்களுடன் தான் செயற்பட முடியும் என எவரும் நிர்ப்பந்திக்கப்பட முடியாது. மேலும், ஒரு கல்லூரியின் பழையமாணவர்கள் வேறுபட்ட குறிக்கோள்கள் நோக்கங்களுடன் அமைப்புகளை உருவாக்கிச் சட்ட ரீதியாகச் செயற்பட முடியாது என இலங்கையில் சட்டம் இயற்றப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை.

அப்படியாயின், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசாவும், கல்விப் பணிப்பாளர்களும் கல்லூரிகளின் பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வந்த அமைப்புக்களுக்கு நிதி, மற்றும் கணக்குகளை அதிபர்களிடம் கையளிக்கும்படி கட்டளையிட்டமை சட்ட ரீதியானதா என்பது முக்கிய கேள்வியாகும். அதாவது: கல்லூரிகளால் உருவாக்கப்படும் Past Pupils' Association களைத் தவிர, வேறு எந்த அமைப்புகளையும் கல்லூரிகளின் பழைய மாணவர்கள் செயற்படுத்த முடியாது எனத் தடுக்கும் அதிகாரம் திரு. சு. இரத்தினராசாவுக்கு உள்ளதா?

அப்படியான அதிகாரம் சட்டபூர்வமாக அவருக்குக் கொடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், திரு. சு. இரத்தினராசா அவர்களின் ''**கட்டளையிடுகை**,'' உண்மையில், கல்வி அமைச்சினது பெயரில், தனது எண்ணப்படி விடப்பட்ட அதிகாரத் துஷ்பிரயோக நடவடிக்கையாகும். இது கல்வி அமைச்சு பொதுமக்களின் செயற்பாடுகளில் சட்ட ரீதியற்ற முறையில் தலையிடும் ஒரு நடவடிக்கையாகும். நாட்டின் அரசியல் யாப்பிலும், சட்டங்களூடாகவும் பிரஜைகளுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களை நிராகரிக்கும் நடவடிக்கையாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று காணப்படும் முக்கிய பெரும் பிரச்சினை அரச நிர்வாகிகள் தமது அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட விதமாக அராஜகச் செயல்களில் ஈடுபடுவதும், அதிகாரத்துஷ்பிரயோகமுமாகும். இப்படியான போக்குகள் பொதுவாக சகல அமைச்சுக்களின் திணைக்களங்களிலும் காணப்பட்டாலும், யாழ். குடாவின் கல்வித்திணைக்கள நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் தொடர்பாக மாத்திரமின்றி, பொது மக்கள் மீதும் தமது அதிகாரத் துஷ்பிரயோகத்தினைச் செய்து வருகின்றனர்.

கல்லூரிகளின் பழைய மாணவர் விடயம் தவிர்ந்த மற்றுமொரு அதிகாரத்துஷ்பிரயோக நடவடிக்கை என்னவென்றால், கல்வித் திணைக்களக் கல்விப்பணிப்பாளர்கள் **"பகுதி நேர'' ஆங்கில ஆசிரியர்கள் மீது திணித்திருக்கும் "புதிய'' சட்டங்களாகும்.**

**'பகுதி நேர'** ஆசிரியர் என்பதற்கு யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களக் கல்விப் பணிப்பாளர்கள் புதிய வியாக்கியானத்தைக் கொடுத்து, அவர்களது பிழையான வியாக்கியானத்தை ஏற்காத ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காதும் இருந்து வருகின்றனர்.

இரு மணித்தியாலங்கள் நாளொன்றுக்கு ஆங்கிலம் கற்பிக்க சம்பளம் கொடுக்கப்படும் இந்தப்பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள், காலை பள்ளிக் கூடம் தொடங்கும் போது சென்று, பள்ளிக் கூடம் முடியும் வரை தங்கியிருந்தாலே சம்பளம் எனக் [illegible] ளும், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் புதிய சட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறை ஊடாக யாழ். நகருக்கு பஸ் சேவை

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஊடாக பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இ. போ. ச. பஸ் சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இச்சேவையை ஆரம்பிப்பதற்கு வடமராட்சி சிவில் நிர்வாகப் பகுதியினர் அனுமதி வழங்கியுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போ அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (இ-173)

★★ மங்களத் திறப்பு விழா ★★

ஹோட்டல் அறுசுவை

HOTEL ARUSUVAI

பிரதான வீதி, (மக்கள் வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.

இன்று (13 - 12 - 96) வெள்ளி காலை 9. 45 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

★ ★ ★ ★

காலை. மாலை, பலகார - சிற்றுண்டி வகைகளுடன், மதியம் முத்தான சோறு அறுசுவை சைவ, அசைவ கறிகளுடன் அருந்தஅனைவரும் வருக!

- உரிமையாளர்

(44086)

மானிப்பாய்

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ - து)

## சட்ட விரோத கள் உற்பத்தி, விற்பனவு தடை

மானிப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்க தொழிற் பரப்புக்கு உட்பட்ட பகுதிகளில் சங்கத்தின் அனுமதியின்றி கள் உற்பத்தியில் ஈடுபடுவதும்,

அனுமதிக்கப்பட்ட சங்கத்தின் தவறணைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் கள் விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை மீறி சட்ட விரோதமான முறையில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது முகாமையாளர்.
மானிப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்கம்
மானிப்பாய். (9063)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1997 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31 – 01 - 97 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோர்களுக்கு அவ்வருட மொத்த வரியில் 10 வீதம் கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குரிய வரியை அந்தக்கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5 வீதம் கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறினால் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும்.

எனவே, தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31 - 01 - 1997 ஆம் திகதி நண்பகல் 12–00 மணிக்கு முன்பாக முழுமையாக இக்காரியாலயத்தில் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:-

1. 1996 ஆம் ஆண்டு முடியவுள்ள வரிநிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 1997 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக் கொள்ளப்படும்.
2. சேதமடைந்ததும் காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31 – 01 - 1997 க்கு முன் கிடைக்கக் கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாக வருடாந்த அறிவித்தல் பத்திரங்கள் கிடைக்கத் தாமதமானாலும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொண்டு தங்கள் வரிகளை உரிய காலத்தில் அலுவலகத்தில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கிறேன்.

சி. நடராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
11 - 12 - 96. (சி-3713)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கை நதி நீர்ப்பங்கீடு குறித்து ஹசீனா - தேவகௌடா ஒப்பந்தம்

## 20 வருட காலப் பிரச்சினைக்குத் தீர்வு

புதுடில்லி டிச. 13

பிரச்சினைக்குரிய கங்கை நதி நீர்ப் பங்கீடு தொடர்பாக இந்தியப் பிரதமர் தேவகௌடாவும் பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனாவும் நேற்று புதுடில்லியில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் 30 வருட காலத்துக்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷேய்க் ஹெசீனா மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற் கொண்டு கடந்த செவ்வாயன்று புதுடில்லி வந்திருந்தார்.

அவரின் இந்திய விஜயத்தின் இறுதியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி உள்ளது.

இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் கடந்த 20 வருட காலமாக கங்கை நதி நீர்ப் பங்கீடு தொடர்பான பிரச்சினை இருந்து வந்தது.

1975 ஆம் ஆண்டு அப்பொழுது ஆட்சியிலிருந்த சுவாமி லீக் தலைவர் முஜிபுர் ரஹ்மான் படு கொலை செய்யப்பட்ட பின்னர் ஆட்சிக்கு வந்த பங்களாதேஷ் தலைவர்கள் இந்தியாவுடன் நல்லுறவு கொள்வதற்கு கங்கை நதி நீர்ப் பிரச்சினையும் தடையாக இருந்தது.

முஜிபுர் ரஹ்மானின் புதல்வி ஷேய்க் ஹசீனா பங்களாதேஷில் ஆட்சியைப் பொறுப்பேற்றதிலிருந்துஇந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான கடந்த கால கசப்பான உறவுகள் மறைய ஆரம்பித்துள்ளன.

இந்த ஒப்பந்தத்துக்கு பங்களாதேஷில் எதிர்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

பங்களாதேஷ் நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறாமல் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று எதிர்க்கட்சிகள் கோரி இருந்த போதிலும், இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி உள்ளது. (இ-10)

# ஆரம்பித்த சமாதானப் பயணத்தை அரசாங்கம் நிறுத்திவிடக் கூடாது

## கூட்டணி எம். பி. கோரிக்கை

''சமாதானம் என்ற பெயரில் ஆரம்பித்த பிரயாணத்தை இடையில் நிறுத்திக் கொள்ளாது, அரசாங்கம் தொடர வேண்டும். இருதரப்பினரும் நிபந்தனை விதித்துக்கொள்ளாது பேச்சுவார்த்தைக்குத் தயாராக வேண்டும்''.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி திருகோணமலை மாவட்ட எம். பி. யான ஏ. தங்கத்துரை தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பேசுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

யுத்தத்தினால் ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாகியுள்ளனர். 12 இலட்சம் பேர் உரிய அடிப்படை வாழ்க்கை வசதிகள் இன்றி கஷ்டப்படுகின்றனர்.

வவுனியா அகதிமுகாமில் 8ஆயிரம் பேர் அளவில் தகுந்த காரணம் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நிலைமையும் அதுவே. ஆண்களும், பெண்களுமாக சுமார் 500 பேர் காணாமல் போயுள்ளனர்.

அண்மையில் திருகோணமலையில் படையினர் மனிதாபிமானம் அற்றமுறையில் கடும் மழையில் மக்களை நிறுத்தி நான்கு மணி நேரம் தேடுதல் நடத்தினர்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

# பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத்துக்குப் பிணை மறுப்பு!

பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத்துக்கு பிணை வழங்க அந்தநாட்டு உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.

எர்ஷாத்தின் பிணை கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது இது இரண்டாவது தடவை ஆகும்.

அதே சமயம் பங்களாதேஷில் கடந்த 6 மாதகாலத்தில் 13 பேர் பொலீஸ் காவலில் இருந்தபோது கொல்லப்பட்டுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டி உள்ளது. (இ-10)

# காவிரி நீதிமன்றம்

சென்னை, டிச. 13

காவிரி நதி நீர் பங்கீடு நடுவர் மன்றத்தின் தலைவராக இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி எம். பி. சிங் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-10)

# சிங்கப்பூர் எம்.பிக்களுக்கு தண்டனை

சிங்கப்பூர், டிச. 13

கடந்த மாதம் நடைபெற்ற சுகாதார பராமரிப்புப்பற்றிய விசாரணையில் பொய் வாக்கு மூலம் அளித்தனர் எனவும்—

அதன் மூலம் நாடாளுமன்றத்தை அவமதித்தனர் எனவும்— சிங்கப்பூர் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் நால்வர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தண்டனை பெறும் நால்வரில் ஒருவர் தமிழர். ஜனநாயகக்கட்சியின் ஆய்வுத் திட்டக்குழுவின் தலைவரான என். குணாளன் என்பவருக்கு 8,000 சிங்கப்பூர் டொலர்கள் அபராதமாக விதிக்கப்பட்டது. (இ-10)

# ஜெயலலிதாவுக்கு சிறையில் பாதுகாப்பு

சென்னை டிச. 13

சென்னை மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு முழுப் பாதுகாப்பும் சகல வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஜெயலலிதாவை சிறையிலுள்ள வேறு எந்தக் கைதிகளும் எளிதில் அணுகமுடியாத அளவுக்கு அவருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் ஜெயலலிதாவின் வீட்டில் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் பொருள் பற்றிய செய்திகள் மிகைப்படுத்தப்பட்டவை என அவரது வழக்கறிஞரும், முன்னாள் சட்டசபை சபாநாயகருமான பி.எச். பாண்டியன் தெரிவித்தார். (இ-10)

# யாழ். கல்வி அதிகாரிகளின்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை உருவாக்கி, சம்பளம் கொடுக்க மறுத்து வருகின்றனர். இது சட்டத்திற்கு முரணானது. இது வெறும் பித்தலாட்டமாகும். இது பெரும் சுரண்டலாகும். நவீன அடிமைத்துவமுமாகும்.

துரதிஷ்ட வசமாக, இந்த நிலைமைகள் ஒன்றினையே வலியுறுத்துகின்றன. யாழ். குடாவின் கல்வித் திணைக்களம் புதிய அரசாங்கத்தினை யாழ். குடாவில் நடத்தி, இலங்கையின் நாடாளுமன்றம் தனது பிரஜைகளுக்குக் கொடுத்த அடிப்படை உரிமைகளையும், சுதந்திரங்களையும் யாழ். குடாவில் நிராகரித்து வருகிறது.

யாழ். குடாநாட்டில், இப்படியான அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு எதிராகச் சட்டங்களினடிப்படையில் நீதிகோர நீதிமன்றம் (District Court) இன்னும் அமைக்கப்படாத நிலையில், கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் தமது விருப்பங்களுக்கேற்ப, தமது அதிகார வெறிகளுக்கேற்ப நடந்து கொள்கின்றனர்.

எந்தவொரு சமூகத்திலும், **உரிமைகள் மறுப்பு** என்பது சட்ட பூர்வமான முறையில் நீக்கப்பட வழிவகைகள் செய்யப்படாவிடின், சமூகம் அதற்கு வேறுவித பரிகாரங்களைத் தேடுவதில்தான் முயற்சிக்கும். யாழ்ப்பாணக் குடாநாட்டில், பல்வேறு பட்ட திணைக்கள நிர்வாகிகளும் தமது விருப்புகளுக்கேற்ற வகையில் நிர்வாகத்தினைச் செய்யச் சந்தர்ப்பங்களைச் சிறிலங்கா அரசு அனுமதித்துவந்து, சட்டங்களுக்கு முரணான விதத்தில் நிர்வாகிகள் செயற்படுவதால் — பாதிக்கப்படுபவர்கள் சட்டபூர்வமாக நீதிகோர வாய்ப்புகளைக் கொடுக்காத நிலையும் தொடருமேயாயின் — ஒரு கட்டத்தில், சட்டம், ஒழுங்கு என்பவைகளில் அவநம்பிக்கை ஏற்படும் நிலைதான் உருவாகும். இவை, சமூகத்தில் சட்டம், ஒழுங்கு என்பவைகள் நிலை குலையவே வழிவகுக்கும். இது ஆபத்தானது.

இவைகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் எமது கல்வித் திட்டங்கள் மாணவர்களதும், ஆகவே சமூகத்தினதும், அறிவையும், ஆராயும் தன்மையையும் வளர்க்க உதவாத விதத்தில் அமைக்கப்பட்டு வந்தது. எமது நாட்டில் மனித வாழ்க்கை பற்றிய விளக்கமற்றவர்கள் ஆட்சியிலும், அதிகாரத்திலும் இருந்து வருவதுமாகும்.

இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தாது போனால், நாட்டில் வன்செயல்கள் தொடரும்; அமைதியின்மை தொடரும்; மனித வாழ்க்கைக்கு அர்த்தமில்லாத நடவடிக்கைகளே தொடரும்; நாடு முன்னேறுவதற்குப் பதிலாக, பின்னடைவுகளே தொடர்ந்தும் ஏற்படும்.

யாழ். குடாநாட்டு மக்கள் எப்படியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் எனத் திணைக்களங்களின் நிர்வாகிகள் கருதுகின்றனர் என்பதை அவர்களின் செயற்பாடுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ✶


# பாராட்டுகிறோம்

**இடைக்காடு மகா வித்தியாலயத்தில்**

க.பொ.தபரீட்சையில் 5D, 4D, 3D, 2D, – 07, 1D-16 பெற்றுசித்தியடைந்து, க.பொ.த. (உ.த)வகுப்பிற்குத் தகுதி பெற்ற 35மாணவர்களையும், கற்பித்த, ஊக்குவித்த ஆசிரியர்களையும்பெற்றோர், பழைய மாணவர்கள் சார்பாகப் பாராட்டுகிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
இடைக்காடு மகா வித்தியாலயம்.
(44088)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 15 — 02 — 1935



உதிர்வு: 05 — 12 — 1994

## அமரர் நல்லதம்பி சிவலிங்கம்

(பிரதம லிகிதர் பிரதேச செயலகம், பருத்தித்துறை)

திதி: **13 - 12 - 1996**

அன்புத்தலைவா! ஆருயிர் அப்பாவே!
என்றும் உங்களை நினைந்து என்புருகி
வாழ்கின்றோம் இங்கு–
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

சங்கவீதி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
(44056)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் செல்லத்துரை சிவராசா

(ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர்)

தோற்றம்: **05-07-1932** மறைவு: **13-11-1996**

எங்கள் பாசத்திற்குரிய தந்தையே!
உங்கள் பிரிவு எமைவாட்டுகிறது.
நீங்கள் எம்முடன் வாழ்ந்த நினைவுகள்
எம் நெஞ்சில் நிழலாடுகின்றன.
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.
உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், தாய், சகோதரர்கள்,
சகோதரிகள், மருமக்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பெறாமக்கள், பேரப்பிள்ளை.

49/7, வில்வந்தெரு வீதி,
கொழும்புத்துறை மேற்கு.
(9064)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அம்பலமாகும் அரசியல்வாதிகள்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தங்க முலாமிட்ட கட்டில் ஒன்றை இறக்குமதி செய்து பயன்படுத்தியது குறித்து தென்னிலங்கையில் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரசாங்கப் பணத்தில் — மக்களின் வரிப் பணத்தில் — அவர் இறக்குமதி செய்த ஆடம்பரப் பொருள்கள் குறித்தும் பரபரப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதே போன்று, தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் வாசஸ்தலத்தில் நாற்பது கிலோ தங்கமும் ஏனைய பல பெறுமதியுள்ள பொருள்களும் கைப்பற்றப்பட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன. அவர் அரச சொத்துக்களை மோசடி செய்தார், சூறையாடினார் என்ற குற்றச்சாட்டுகளுடன் வழக்குகள் பலவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவுக்கும் எதிராகப் பல வழக்குகள் தாக்கலாகி விட்டன.

அரசியல் தலைவர்கள், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் பதவிக்கு வந்ததும் அவர்களுக்கு பலவித ஆசைகள்— புதுமையான ஆசைகள்—, வந்து விடுவதுண்டு என்பதற்கு இவை உதாரணங்கள்.

சமூகத்தில் புரையோடியிருக்கும் மோசடி, ஊழல். மற்றும் மக்கள் விரோதச் செயல்களை ஒழிக்கப்போவதாகக் கூறி மக்கள் தலைவர்களாக வருபவர்கள், தாமே அச்செயல்களைப் புரிவது ஒன்றும் புதியதல்ல.

ஜப்பான் உட்பட கீழைத் தேச நாடுகளில் அரசியல் அதிகாரத்தை வைத்துக் கொண்டு, மக்கள் தலைவர்கள் எனப்படுவோர் திரைமறைவில் மக்கள் துரோகச் செயல்களில், தேச விரோதச் செயல்களில் ஈடுபடுவது அதிகரித்து வருகிறது.

பதவிக்கு வருவதற்கு முன் மக்கள் நலன்களைப் பற்றிப் பேசும் அரசியல் தலைவர்கள், அதிகார ஆசனங்களில் அமர்ந்ததும், தமது நலன்களிலேயே முழுக்க முழுக்க நாட்டம் கொள்கின்றார்கள். தாம் நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் துரோகத்தை மறைத்துவிடலாம் என்று நினைப்பது தான் எல்லாவற்றையும் விட ஆச்சரியத்துக்கு உரியது.

அரசியல்வாதிகள் போடும் வெளிவேடங்களால், அவர்களை மக்களால் உரிய முறையில் இனங்காண முடிவதில்லை. எனினும் அரசியல் தலைவர்களைத் திருத்த வேண்டிய பொறுப்பு மக்களிடமே உண்டு. அவர்கள் விழிப்பாக இருந்தால், வாக்கு என்னும் ஆயுதத்தால் அரசியல் வேடதாரிகளுக்குப் பாடம் புகட்டலாம்.

தமது அரசியல்எதிரிகளின் மதிப்பை, ஆதரவைக் குறைப்பதற்காக, முந்திய ஆட்சியின் ஊழல்கள், மோசடிகளை வெளிக்கொணர்வதிலேயே அரசாளர்கள் ஆட்சிக் காலத்தைச் செலவிடும் புதிய மரபு ஒன்று இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளிலும் இப்போது பரவி வருகிறது.

தூய்மையான அரசியல்வாதி என்று இப்போது எவருமில்லை. அரசியல்வாதிகள் தமக்குள் தாமே மற்றவரைத் தண்டிப்பதைவிட, மக்களே தண்டிக்க இடமளிப்பது தான் நல்லது.

# புதன் இரவு பெய்த மழையால் குடாநாட்டில் பெரு வெள்ளம்

## பயிர்கள் பெருமளவு அழியும் ஆபத்து

யாழ்ப்பாணம், டிச. 13

குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவு பெய்த அடை மழை காரணமாக பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது,

நேற்றுப்பகல் மழை சற்றுத் தணிந்திருந்தபோதிலும் வெள்ளம் பெரிய அளவில் வடியவில்லை.

பல இடங்களில் வெள்ளம் காரணமாக வீதிப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்த மழையினால் குடாநாட்டில் உள்ள வயல்கள் எல்லாம் வெள்ளத்தால் மூடுண்டுள்ளன.

மேட்டுநிலப் பயிர்களான கத்தரி, மிளகாய், பயற்றை, மரவள்ளி, பூசணி ஆகியவையும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

வெங்காயமும், புகையிலைச் செய்கையும் பாதிக்கப்பட்டிருப்பதால் மரக்கறி வகைகளுக்கும் மற்றும் விவசாய உற்பத்திகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து உருவாகியுள்ளது.

நேற்றுக் காலை வீசிய காற்றினால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன.

(இ-5-11-28-117-145-173)

## வீட்டுக்குள் வெள்ளம் வரவே குழந்தையுடன்வெளியேறியவர்பலி

### வெள்ளம் மூடிய கிணற்றில் வீழ்ந்தார்

தென்மராட்சி, டிச. 13

வீட்டுக்குள் வெள்ளம் புகுந்ததால் மகனைத் தூக்கிக் கொண்டு உறவினர் வீட்டுக்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளம் நிரம்பியிருந்த கிணற்றில் வீழ்ந்து மரணமான சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.00 மணி அளவில் கைதடி மேற்கில் இடம் பெற்றது.

மகனுடன் இவர் கிணற்றுக்குள் விழுந்ததைக் கண்ட மனைவி கூக்குரலிட்டதால் நீரின் மேல் வந்த மகன் அயலவர்களால் காப்பாற்றப்பட்டார்.

ஆனால் தந்தையைக் காப்பாற்ற முடியவில்லை.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா (வயது 38) என்னும் ஐந்து பிள்ளைகளின் தந்தையே பலியானவராவார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

கைதடி மேற்கு கிராம அலுவலர் எஸ். பி. செல்லையா சாட்சிகளை நெறிப்படுத்தினார். (இ - 117)

## யாழ். பல்கலைக்கழக ஆவணங்கள் கிளிநொச்சியிலிருந்து வந்தன

யாழ்ப்பாணம், டிச. 13

யாழ். பல்கலைக்கழகத்தின் சகல ஆவணங்களும் கிளிநொச்சியில் இருந்து நேற்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டன.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட இந்த ஆவணங்கள் வவுனிக்குளத்தில் வைக்கப்பட்டிருந்தன.

அங்கிருந்து அவற்றை வவுனியா ஊடாக கொழும்புக்கு எடுத்துச் சென்று பின்னர் அவை திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அங்கிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் நேற்றுப் பல்கலைக் கழகத்துக்கு அவை எடுத்து வரப்பட்டன.

பல்கலைக் கழகத்துக்கு முக்கியமாகத் தேவைப்பட்ட இந்த ஆவணங்களை எடுத்து வர உதவிய சகலருக்கும் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நன்றி தெரிவித்துள்ளார். (இ.3)

## வலி.தென் மேற்கு ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், டிச. 13

வலி. தென் மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்களுக்கான வவுச்சர்கள் இம்மாதம் முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஓய்வூதிய பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

மானிப்பாய், மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெற்றவர்களின் வவுச்சர்கள் அந்தந்தக் கிராமிய வங்கிகளுக்கும் —

ஏனைய வங்கிகளில் ஓய்வூதியம் பெற்றவர்களின் வவுச்சர்கள் அவர்களின் முகவரிக்கும் — அனுப்பி வைக்கப்படுமென சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். டிசம்பர் மாத வவுச்சர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## ஆசிரியர்களுக்கான ஆபத்து அலவன்ஸ்

### விரைவில் வழங்கப்படும்

திருகோணமலை, டிச. 13

வடக்கு—கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கான 4 மாத கால ஆபத்து அலவன்ஸ் கொடுப்பனவை உடன் வழங்க மாகாணக் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்காக 4 கோடி 40லட்சம் ரூபாவுக்கான காசோலை மத்திய கல்வி அமைச்சில் இருந்து மாகாணக் கல்வியமைச்சுக்கு நேற்று முன்தினம் கிடைத்ததாக மாகாணக் கல்வியமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

உடனடியாக வடக்கு — கிழக்கில் உள்ள மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு காசோலைகள் அனுப்பப்படவிருப்பதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-150-3)

## லயன்ஸ் வைத்திய முகாம்

யாழ்ப்பாணம், டிச. 13

சுன்னாகம் லயன்ஸ் கழகமும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து நடத்தும் இலவச வைத்திய முகாம் தொடரில் —

இம்மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு மல்லாகம் சிகிச்சை நிலையத்தில் சலப் பரிசோதனையும், இரத்த அமுக்கப் பரிசோதனையும் நடத்தப்படும்.

முப்பது வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் இந்த முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், டிச. 13

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 1995 ஆம் ஆண்டுக்கான இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. இன்று காலை 10 மணி முதல் கலாசாலையில் முடிவுகளைப் பார்வையிடலாம் என அதிபர் கலாநிதி காரை எஸ். சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். [உ]

## பிரதேச செயலகத்துக்கு வர அழைப்பு

யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள் தவிர்ந்த ஏனைய வெளிக்கள உத்தியோகத்தர்களை இன்று காலை அவசர வேலைகளுக்காக பிரதேச செயலகத்துக்கு வருமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (இ-3)

## ஆங்கில ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

வடக்கு— கிழக்கு டெலிக் ஆங்கில பயிற்சி முடித்தவர்களுக்கு ஆங்கில ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர் வரும் 18 ஆம் திகதி வடக்கு— கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல கல்வி அலுவலகங்களிலும் நடைபெறவிருப்பதாக மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் தெரிவித்தார்.

# விக்கினம் நீக்கும் விநாயகர் விரதம்

தனக்கு மேல் ஒரு தலைவர் இல்லாத தன்மையால் அதாவது வேறு நாயகர் இல்லை என்ற காரணத்தினால் விநாயகர் என்றும், கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்குபவராதலால் கணபதி என்றும் அழைக்கப்படுபவர் பிள்ளையார். இவர் விக்கினேஸ்வரர், கணேசன், ஆனைமுகன், கரிமுகன், கஜமுகன் என்றெல்லாம் அழைக்கப்படுவார். இத்தகைய பெருமைமிக்கவரான பிள்ளையாரைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதங்களுள் சக்தி வாய்ந்தது இருபத்தொருநாள் நோற்கப்படும் பிள்ளையார் நோன்பாகும். இவ்விரதத்தை முறைப்படி அனுட்டித்தால் பரலோக முத்தி கிடைக்கும் என்பது ஆன்றோர் முடிவு. நாளை மறுதினம் இந்த ஆண்டுக்கான விநாயகர் விரதம் நிறைவு பெறுகிறது.

இவ்விரதத்தை அனுட்டித்துப் பெருமையடைந்தோர் மிகப்பலர். இருபத்தொரு நாளும் படிக்கப்படும் பிள்ளையார் கதையிலேயே அதன் பெருமை மிக நன்றாக விளக்கப்பட்டுள்ளது.

உலகைக் காக்கும் பரம்பொருளான பரமேஸ்வரன் திரிபுர தகனத்தின்போது, கணபதியைக் கருத்திற்கொள்ளாத காரணத்தால் தேரின் அச்சு முறிந்தது என்றும், கலியுக வரதனாம் கந்தப் பெருமான் வள்ளியை ஆட்கொள்ளப் புறப்பட்டபோது விநாயகரை நினையாது சென்றதனால் காரியம் கைகூடவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஓங்கார மூர்த்தியான விநாயகரை வழிபட்டால் ஆங்காரம் நீங்கும் என்பது முதுமொழி. நாம் எழுதத் தொடங்கும் போதும் கூட பிள்ளையார் சுழிபோட்டே தொடங்குகின்றோம். பண்டைய நூல்கள், பாடல்கள் எதை எடுத்தாலும் விநாயகர் காப்புச் செய்யுளுடனேயே ஆரம்பிப்பதை நாம் காணக் கூடியதாயிருக்கின்றது.

தும்பிக்கையான் மேல் நம்பிக்கை வைத்து தவறாது வழிபட்டால் நிச்சயம் பூவுலகில் சிறப்புற வாழலாம். ஒரு முறை ஒளவையார் அவசரம் அவசரமாக விநாயகருக்குப் பூசை செய்தார் அது கண்ட விநாயகர், ''ஒளவையே; என்ன அவசரம்?'' என வினவினார். ஒளவையாரோ, ''நான் கைலாசம் போக வேண்டும். அதுதான் இன்று அவசர அவசரமாகப் பூசை செய்கின்றேன்'' என்றார். அப்போது விநாயகர், ''நானே உனைக் கைலாசம் சேர்க்கின்றேன். அவசரம் விடுக'' என்று அருளிச் செய்தார். பின்பு தன் துதிக்கையாலேயே அவரைத் தூக்கிக் கைலாசத்திலே விட்டார் என்பது வரலாறு.

இதிகாசங்களில் சிறந்ததாகக் கருதப்படும் மகாபாரதக் கதையை எழுதியவரும் விநாயகரே. இவரை வழிபடுவது மிகவும் சுலபம். சாணக உருண்டையிலே அறுகம் புல்லை வைத்தால் வந்து விடுவார் பிள்ளையார். ''மண்ணினாலே செய்யினும் மஞ்சளிலே செய்யினும் அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்'' என்ற பாடல் இதனை வலியுறுத்தும்.

ஆமையானது ஐந்துறுப்புக்களையும் தன்னகத்திலே அடக்குவது போல பிரணவமும் நாதம், விந்து, அகரம், உகரம், மகரமாகிய ஐந்தையும் தன்னடக்கியுள்ளது என்பதை விளக்கி நிற்கின்றது விநாயகர் திருவுருவம்.

சைவ சமய மக்கள் ஒவ்வொருவரும் பிள்ளையார் நோன்பிருக்க வேண்டும். ஏனெனில் தொப்பையப்பனைத் தொழுதால் வினை வேரோடு களையப்பட்டு நாம் புனிதராகி விடுவோம்.

எத்தனையோ கஷ்டங்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் வாழும் எமக்கு விநாயக விரதம் ஒரு நல்ல விடிவைத் தரவேண்டும் என்று அவனருளாலே அவன் தாள் பணிந்து அவனருள் பெற்றுய்வோமாக.

—இராசையா ஸ்ரீதரன்.

### ஞானக்கதிர்

### நாளை

**கார்த்திகை 29**
சனிக்கிழமை
**திதி:** சதுர்த்தி
பிற்பகல் 3.20 வரை.
**நட்சத்திரம்:** திருவோணம்
பின் இரவு 2.12 வரை.
சதுர்த்தி விரதம்
**ராகுகாலம்:** 9.21– 10.51
**சுபநேரம்:** 3.21 - 4.51
(பகலுக்கும் இரவுக்கும் ஏழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை

சித்திவிநாயகர் தேவஸ்தானம்

கஜமுகாசுர சங்காரப் பெருவிழா

நிகழும் தாது வருடம் கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி (14-12-1996) சனிக்கிழமை சதுர்த்தியும் திருவோண நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில்

**கஜமுகாசுர சங்காரப் பெருவிழா**

பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. இவ்விழாவில் விசேஷ நாதஸ்வரக் கலைஞர்களும், நடனக் கலைஞர்களும் பங்குபற்றுவார்கள். இதன்பின் எம்பிரானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

இவ்விழாவினைத் தரிசித்து சித்தி விநாயகரின் இஷ்டசித்திகளைப் பெற்று உய்யும்வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

விழா உபயகாரர்

(44070)



## 2ஆவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் பட்டு சுயந்தன்

சங்குவேலி வடக்கைச் சேர்ந்த

**பட்டு - தேவி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **சுயந்தன்** இன்று **13—12—96** தனது 2 ஆவது பிறந்த நாளை தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, மம்மி, அப்பையா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், சித்திமார் ஆகியோர் சரஸ்வதி அருள் பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

பட்டு-தேவி

சங்குவேலி வடக்கு,
சங்குவேலி.

(சி/3714)



## மகாநதி புடைவை அகம்

வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

எம்மிடம் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்

★ திருமண பட்டுப் புடைவைகள், பட்டு வேஷ்டிகள், இந்தியன் சாறிவகைகள், ஸ்கேட் அன்ட் பிளவுஸ், கவுண், சேட், Tசேட், சூட்டிங்

மற்றும்

சகலவிதமான பிறின்ற், பிளேன் துணிவகைகளுக்கும்

**மகாநதி**

4, நவீனசந்தை, சாவகச்சேரி.

★ மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

(9062)



## மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்


## புலிகளுக்கு ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் போன்றவையும் ஏனைய சாதனங்களும் இப்பிரசார இயக்கத்துக்குப் பயன்படுத்தப்படும் — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## புளுக்குனாவவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு முகாமில் இருந்து புலிகள் கைப்பற்றிய பாரிய ஆயுதங்களைக் கொண்டே இந்த முகாமைத் தாக்கியிருக்கலாம் எனப் படை வட்டாரங்கள் கருதுகின்றன.

முகாமில் இருந்த — தென்னாபிரிக்சத் தயாரிப்பான — பவள் கவசவாகனம்ஒன்றைப் புலிகள் எடுத்துச் சென்றிருக்கலாம் என்றும் —

மற்றைய இரு கவச வாகனங்களை அவர்கள் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர் என்றும் —

படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மகா ஓயா விசேட அதிரடிப்படைத் தளபதி உதவிப் பொலீஸ் அதிபர் மதநாயக்காவும், இன்ஸ்பெக்டர் குணரத்தினவும் தாக்குதல்நடந்த சமயம் முகாமில் இருந்தனராயினும் இருவரும் உயிர் தப்பிவிட்டனர்.

இந்த முகாமில் இருந்து காணாமல் போனதாகக் கருதப்படும் சில அதிரடிப் படையினர் உயிருடன் விடுதலைப் புலிகளால் பிடித்துச் செல்லப் பட்டிருக்கலாம் என்றும் —

அப்படிப் பிடிபட்டிருந்தால் புலிகளால் விசேட அதிரடிப் படையினர் பிடித்துச் செல்லப்பட்டமை இதுவே முதல் தடவையாக இருக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

முகாமின் ஆட்டிலறி பகுதி மீதுதான் விடுதலைப்புலிகள் முதலில் தாக்குதல் நடத்தியுள்ளதால், பெருவாரியான ஆட்லறி ஆயுதங்களை அவர்கள் கைப்பற்றியிருக்கலாம் என படை வட்டாரங்கள் அதிர்ச்சி தெரிவித்தன.

விசேட அதிரடிப்படைத் தளபதி தர்மசிறி வீரக்கோன் முகாம் பகுதிக்கு உடன் சென்று நிலைமையை நேரில் ஆராய்ந்தார் —

— இப்படி ''த ஐலண்ட்'' பத்திரிகையும் ஏனைய கொழும்புப் பத்திரிகைகளும் தகவல் வெளியிட்டன.

(உ-3-150)

## கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாக்கியிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இராணுவத் தளத்திலிருந்து புலிகள் அள்ளிச் சென்ற அதிநவீன ஆயுதங்கள் தமக்கெதிராகப் பயன்படுத்தக் கூடும் என்ற கவலையும் இராணுவத்துக்கு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## 34 புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீது விமானப் படையினர் தாக்குதல்கள் மேற்கொண்டனர் எனவும் —

ஆனால் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் —

ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது படையினர் அப்பிரதேசம் எங்கும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

(உ-10)

## 3 மாணவியரின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் ''டை''யும் காணப்பட்டதாகவும் —

பி. பி. ஸி. குறிப்பிட்டது.

1989, 1990 ஆம் ஆண்டுகளில் தென்பகுதியில் இடம்பெற்ற கிளர்ச்சியின் போது இவ்வாறான காட்சிகளைத் தென்னிலங்கை மக்கள் மீண்டும் மீண்டும் நேரில் கண்டனர் என்றும் பி.பி.ஸி. குறிப்பிட்டது. [illegible]



# இந்திய அணி அபார வெற்றி!

கோன்பூர், டிச. 13

இந்திய — தென்ஆபிரிக்க அணிகளுக்கு இடையே கோன்பூரில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா 280 ஓட்டங்களால் தென் ஆபிரிக்காவை வென்றது

மூன்று டெஸ்டுகளைக் கொண்ட இந்தப் போட்டித் தொடரை இந்த வெற்றியின் மூலம் 2 — 1 என்ற வீதத்தில் இந்தியா வென்றுள்ளது.

5 விக்கெட் இழப்புக்கு 127 ஓட்டங்களுடன் நேற்று 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென் ஆபிரிக்கா 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்திய அணிக்கு தலைமை வகிக்கும் டென்டுல்கார் தனது தலைமையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் தொடரில் வென்று சாதனை படைத்துள்ளார். (இ-10)

# ஜெயலலிதாவின் பிணை மனு நிராகரிப்பு

புதுடில்லி, டிச. 13

எட்டரைக்கோடி ரூபா வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கிய ஊழல் தொடர்பாக கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிணைமனு நிராகரிக்கப்பட்டு விட்டது.

பிணை மனு மீது நேற்று தீர்ப்பு வழங்கிய சென்னை அமர்வு நீதிமன்றம், அவரின் வழக்கறிஞரின் கோரிக்கையை நிராகரித்தது.

(இ-5)

## காங்கேசன்...

(1 ஆம் பாக்கத் தொடர்ச்சி)

தாக திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

சுமார் 500 பயணிகளுடன் வரும் இக்கப்பல் ஒருதொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

# சுவீடிஷ் தூதுவர் வவுனியா விஜயம்

கொழும்பு, டிச. 13

சுவீடன் தூதுவர் டோர் வால்ட் அக்கீசன் கடந்த திங்கட்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

வவுனியாவில் யுனிசெவ், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மேற்கொள்ளும் திட்டங்களைப் பார்வையிட்ட அவர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (இ-3-150)

# தேர்தல் திகதி அறிவிப்பு

வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களுக்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தேர்தல்கள் பின்போடப்பட்டுள்ளனவே தவிர ஒத்திவைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-150)


உ

சிவமயம்

'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள

**பரமேஸ்வராக் கல்லூரியின்**

நிறுவுனரும் சைவப் பெருவள்ளலாருமான

**சேர். பொன். இராமநாதன்**

அவர்களின்

## நினைவு தினவிழா

**14 — 12 — 1996** சனிக்கிழமை

இதனையொட்டி அன்று காலை **8.00** மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் எம்பெருமானுக்கு விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து காலை **10.00** மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் உள்ள சேர். பொன். இராமநாதன் அவர்களது உருவப் படத்திற்கு பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்ச்சியும் இடம்பெற உள்ளது.

பின்னர் சேர். பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவன குருகுலச் சிறுவர்களின் வேதபாராயணமும், திருமுறை ஓதலும் நடைபெற்று, பிரவேச சிவாச்சாரிய பரீட்சையில் சித்திபெற்ற குருகுல மாணவர்களுக்கான சான்றிதழ்களைப் பதில் துணைவேந்தர் வழங்கிச் சிறப்பிப்பார்.

குறிப்பு:

நாட்டின் சூழ்நிலை காரணமாக வழமையாக மாலை 3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இங்ஙனம்

**இந்து மன்றம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
9. 12. 1996

(44065)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org